விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 081 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 26 செவ்வாய்க்கிழமை (10.03.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




குருக்கள்மடம் மனிதப் புதைகுழியின்

## முதலாம் கட்ட அகழ்வுப் பணி மார்ச் 30ஆம் திகதி ஆரம்பம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - குருக்கள்மடம் மனிதப் புதைகுழியின் முதலாம் கட்ட அகழ்வுப் பணி

15ஆம் பக்கம் பார்க்க

இஸ்ரேல் மீது ஈரான் கொத்துக் குண்டுத் தாக்குதல்

## தமிழ் இனப் படுகொலையினை மீளவும் ஞாபகப்படுத்துகின்றது

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

சர்வதேச போர் விதிகளை மீறி ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசு நிகழ்த்திய அதே கொடூரமான கொத்துக் குண்டுத் தாக்குதல்களை, இன்று ஈரான்

15ஆம் பக்கம் பார்க்க

மின்சார சபையை தனியார் மயப்படுத்தவில்லை

# திறைசேரிக்கு சொந்தமான நிறுவனங்களிடம் பொறுப்பு

### வலுச்சக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி



*(கொழும்பு)*

மின்சார சபை தனியார் மயப்படுத்தப்பட வில்லை. திறைசேரிக்குச் சொந்தமான அரச நிறுவனங்களிடமே பொறுப்புகள் வழங் கப்பட்டுள்ளன என வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்தார்.

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## எரிபொருட்களின் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனம் தனது எரிபொருட்களின் விலைகளைத் திருத்து வதற்கு நேற்றிரவு தீர்மானித்துள்ளது.

இதன்படி 293 ரூபாயாகக் காணப்பட்ட 92 ரக ஒக்டேன் பெற்றோல் லீற்றரின் விலை 24 ரூபாயினால் அதிகரிக்

16ஆம் பக்கம் பார்க்க

## மின்சார சபை கலைக்கப்பட்டது

6 அரச நிறுவனங்களாக மின்சார துறை மறுசீரமைப்பு

05ஆம் பக்கம் பார்க்க

கண்டி - நுவரெலியா பூசாரிகள்

## நயினாதீவில் மோதல்

### கண்டியைச் சேர்ந்தவர் வெட்டிக் கொலை



(நயினாதீவு)

நயினாதீவில் கண்டி மற்றும் நுவரெலியா பூசாரி களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் கண்டியை சேர்ந்த பூசாரி வெட்டிப் படுகொலை செய்யப்பட் டுள்ளார்.

நேற்று மாலை நயினாதீவில்

15ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் விலை உயர்வு குறுகிய காலமே நீடிக்கும்

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



(நியூயோர்க்)

எரிபொருள் விலை உயர்வு குறுகிய காலமே நீடிக்கும். ஈரானின் அணுவாயுத அச்சுறுத் தல் முடிவுக்கு வந்தவுடன் எரிபொருள் விலை மீண்டும் வேகமாக வீழ்ச்சி

15ஆம் பக்கம் பார்க்க

## சிறுமியை வன்புணர்ந்தவருக்கு பத்து வருட கடூழியச் சிறை

### கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் கடந்த 2015ஆம் ஆண்டு பன்னிரெண்டு வய துச் சிறுமியொருவரை பாலி யல் வன்புணர்விற்குட்படுத் திய குற்றவாளிக்குக் கிளி நொச்சி மேல் நீதிமன்றம் பத்து வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப் பளித்துள்ளது.

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் கடந்த 2015ஆம்

15ஆம் பக்கம் பார்க்க

## இளவாலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலையில் விப ரீத முடிவெடுத்த குடும் பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கு இடமில்லை

### ஈரான் அறிவிப்பு



(தெஹ்ரான்)

அமெரிக்கா மற்றும் இஸ்ரே லின் இராணுவத் தாக்குதல்கள் தொடரும் வரை, போர் நிறுத்தம் குறித்து விவாதிக்க இடமில்லை என்று ஈரான்

02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின்
முகாமையாளர் பண்டிதை

**திருமதி உதயலதா நவதீசன்**
BA(Hons) Tamil, PGDE,
MA(Tamil), MEd

அவர்கள் 21.02.2026 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 40 ஆவது பட்டமளிப்பு விழாவில் **தமிழில் முதுதத்துவமாணி** பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று, உயர் பதவிகளில் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

வாழ்த்துவோர் :
விரிவுரையாளர்கள்,
ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்,
மானிப்பாய்.
(7009)



## இலங்கை சாரணர் சங்கம்
## யாழ்ப்பாணம் மாவட்ட சாரணர் கிளைச் சங்கம்
## அங்கத்தவர்களை இணைத்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்திற்காக ஆயுட்கால உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.
சாரணர் செயற்பாடுகளில் ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.
விண்ணப்பப் படிவங்களினை Jaffna District Scout Branch முகநூல் பக்கத்தில் அல்லது உதவி மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் கிளைச் சங்க உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி : 23.03.2026**

ம.பிரதீபன்
மாவட்ட ஆணையாளர்
யாழ்ப்பாண மாவட்ட சாரணர் கிளைச்சங்கம்

தொடர்புகளுக்கு : 077 129 3437
(உதவி மாவட்ட ஆணையாளர் நிர்வாகம்)
(C-5169)



# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 - 10 - 1955 | 09 - 03 - 2026 |

## நிர்மலாதேவி சங்கரபாலன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மந்துவில் மற்றும் கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நிர்மலாதேவி சங்கரபாலன் அவர்கள் நேற்று (09.03.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகசுந்தரம் - ஞானாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சங்கரபாலன் அவர்களின் அன்பு மனைவியும் யோகேஸ்வரி, அரியரட்ணம் ஆகியோரின் சகோதரியும் யோகாம்பிகை, கணேஸ்வரன் (மென்பொறியியலாளர், campio, பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயதிலீபன்(நடத்துனர் - இ.போ.ச யாழ். சாலை) அவரின் அன்பு மாமியாரும் சய்ந்தவி, வேணுசாயி ஆகியோரின் அம்மம்மாவும் தேவகி, கமலாதேவி, சிவபாலன், இந்திரபாலன், தயாளினி, அமரர் ஜெயபாலன் மற்றும் நந்தபாலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2026) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புதிய தபாற்கந்தோரடி,
நாவலடி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல் :
கணவர் - சு.சங்கரபாலன்
077 677 7042
(7015)


## திறைசேரிக்கு...

இலங்கை மின்சாரசபை மறுசீரமைக்கப்பட்டமை தொடர்பில் நேற்று திங்கட்கிழமை (9) விசேட அறிவிப்பை விடுத்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் பணிகள் வெற்றிகரமாக முடிவடைந்தது. நூற்றுக்கு நூறு சதவீதம் அரசுக்கு சொந்தமான பங்குகளைக் கொண்டுள்ள நான்கு அரச நிறுவனங்களிடமும், இரண்டு இணை நிறுவனங்களிடமும் மின்சார சபையின் விடயதானங்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன.

மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது மின்சாரசபையின் சேவையாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.பல்வேறு காரணிகளின் நிமித்தம் சுய விருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து ஓய்வு பெறும் தீர்மானத்தை அறிவித்தவர்களுக்கு சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு போதுமான இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கம் மின்சார சபையை 12 கூறுகளாக பிரித்து, 12 ஆயிரம் பேரை சேவையில் இருந்து நீக்குவதற்கு தீர்மானித்து அதற்குரிய வகையில் சட்டத்தையும் இயற்றியது. இந்த சட்டத்தை திருத்தம் செய்து புதிய உள்ளடக்கங்களுடன் மின்சாரசபை மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் உரித்தை முழுமையாக அரச நிறுவனம் ஊடாக பாதுகாத்துக்கொண்டு இந்த மறுசீரமைப்பு பணியை நிறைவு செய்துள்ளோம் என்பதை வெளிப்படையாக குறிப்பிட முடியும். மின்சார சபை தனியார் மயப்படுத்தப்படவில்லை. திறைச்சேரிக்கு சொந்தமான அரச நிறுவனங்களிடமே பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகள் குறித்து கடந்த ஒரு ஆண்டு காலமாக சகல தரப்புடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். சுமார் 42 மின்சார தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி அவர்களின் யோசனைகளை மறுசீரமைப்புக்குள் உள்ளடக்கியுள்ளோம்.

நட்டத்தில் இயங்கும் மின்சார சபையை மறுசீரமைத்து அதன் உச்சப்பயனை நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும். மின்சாரத் துறை வினைத்திறனான வகையில் பொது மக்களுக்கு சேவை வழங்க வேண்டும் என்பதற்காகவே இந்த மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மறுசீரமைப்பினால் மின்சாரசபையின் சேவையாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. புதிய நிறுவன கட்டமைப்புக்குள் இவர்கள் சேவைக்குள் உள்வாங்கப்படுவார்கள். கட்டமைப்பில் மாத்திரமே மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## போர் நிறுத்தம்...

அறிவித்துள்ளது.

ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் எஸ்மாயில் பகாயி இதனை நேற்றைய ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

ஈரான் போரைத் தொடங்கவில்லை என்றும், மோதல் தொடங்கிய போது அது பேச்சுவார்த்தைகளில் இருந்ததாகவும் கூறியுள்ளார்.

11ஆவது நாளாக இராணுவ ஆக்கிரமிப்பைக் கொண்ட அமெரிக்க - இஸ்ரேலிய தாக்குதல் தொடர்கிறது. நாங்கள் இந்தப் போரை ஆரம்பிக்கவில்லை என மேலும் தெரிவித்தார்.

இராணுவ ஆக்கிரமிப்பு நடந்து கொண்டிருக்கிறது, எனவே இந்த சூழ்நிலையில் எதிரிக்கு எதிரான பாதுகாப்பு மற்றும் நசுக்கும் பதிலடியைத் தவிர வேறு எதையும் பற்றிப் பேசுவதற்கு இடமில்லை என்று அவர் மேலும் கூறினார், ஈரானின் முழு கவனமும் தற்போது நாட்டைப் பாதுகாப்பதில் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




யா/யூனியன் கல்லூரியின் கல்விசாரா
உத்தியோகத்தர் பணியிலிருந்து 10.03.2026
இன்று ஓய்வுபெறும்

**குமாரசிங்கம் சிறிகரன்**

அவர்களது பணிநயந்து பாராட்டி வாழ்த்துவதோடு அகவை அறுபதில் தடம் பதிக்கும் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்

சேவை விபரம்
10.05.1994 – 31.12.2001
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்
01.01.2002 – 31.12.2014
யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்
01.01.2015 – 10.03.2026
யா/யூனியன் கல்லூரி

வாழ்த்துவோர் :
ஆசிரியர் ஊழியர் நலன்புரிக் கழகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
(7012)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய ரீதியில் பணவீக்கம் அதிகரிக்கும்



## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

**(வோஷிங்டன்)**

**எரிபொருள் பாதுகாப்பு உயர் மட்ட பேசுபொருளாக உள்ள நிலையில், உலகளாவிய ரீதியாக பணவீக்கம் ஏற்படுமென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 சதவீத எண்ணெய் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து 40 புள்ளி உலகளாவிய பணவீக்கம் ஏற்படுமென சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார். ஜப்பான் நிதியமைச்சின் அனுசரணையுடன் நடந்த கருத்தரங்கிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதற்கும் தயாராக இருக்குமாறு கொள்கை வகுப்பாளர்களுக்கு எனது ஆலோசனைகளை தெரிவித்துள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# சர்வதேச சந்தையில் உச்சம் தொட்ட மசகு எண்ணெய்

(கொழும்பு)

மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் போர்ப்பதற்ற நிலை காரணமாக சந்தையிலிருந்து தினமும் 20 மில்லியன் பீப்பாய்களின் மசகு எண்ணெய் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முறையாக உலகளாவிய ரீதியிலான மசகு எண்ணெய் ஒரு பீப்பாயின் விலை 100 அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

சர்வதேச சந்தை அளவீடான பிரெண்ட் மசகு எண்ணெய் விலை, ஆசிய பசிபிக் சந்தைகளில் புதிய வார வர்த்தகம் தொடங்கியதும் 12.2 சத வீதம் உயர்ந்து ஒரு பீப்பாயின் விலை 104.05 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கடுவலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுவலை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுவலை, வெலிவிட்ட பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவோல்வர் துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கடுவலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# முன்னாள் எம்.பி சஜின் வாஸ் கைது!

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, சட்டவிரோத சொத்துக்களைச் சேர்த்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் நேற்று ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.



சட்டவிரோத சொத்துக்கள் ஈட்டியது தொடர்பான விசாரணைக்காக வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக, அவர் கையூட்டல் ஆணைக்குழுவுக்கு வருகை தந்திருந்தார்.

வாக்குமூலம் வழங்க வந்திருந்த வேளையிலேயே, விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகள் அவரை கைது செய்துள்ளனர்.

சுமார் 243.8 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமான முறையில் ஈட்டியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (நி)

# 'குஷ்' உடன் இந்திய பிரஜை கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் குஷ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப்பிரிவின் விமான நிலையப் பிரிவு உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே அவர் [illegible]ள்ளார்.

கைதானவர் 27 வயதுடைய இந்தியப் பிரஜை என தெரியவந்துள்ளதுடன் அவரிடமிருந்து 2 கிலோ கிராம் 762 கிராம் எடையுள்ள குஷ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

மேலும் இது தொடர்பாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுங்கள்!

## மத்திய கிழக்கு நிலவரம் குறித்து ஹர்ஷ



(கொழும்பு)

"இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் போர்ச்சூழல் உருவானால், அது இலங்கையை மாத்திரமன்றி ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்திலும் பாரிய எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும்." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், அங்குள்ள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

"சர்வதேச கடல் பகுதியில், இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதாரக் கடற்பரப்புக்கு அண்மித்த பகுதியில் ஈரானியக் கப்பல் தாக்குதலுக்குள்ளான விடயம் கவலையளிக்கின்றது.

இலங்கை எப்போதும் அமைதியை விரும்பும் ஒரு நாடு. மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலில் நாம் எத்தரப்புக்கும் சார்பானவர்கள் அல்லர். பிராந்திய ஸ்திரத்தன்மையையும் அமைதியையும் பேணுவதையே நாம் வலியுறுத்துகின்றோம்.

உலகின் மிகவும் பரபரப்பான கப்பல் போக்குவரத்துப் பாதையிலிருந்து இலங்கை சில கிலோமீற்றர் தொலைவிலேயே அமைந்துள்ளது. ஆண்டுதோறும் சுமார் 60 ஆயிரம் கப்பல்கள் இலங்கையைக் கடந்து செல்கின்றன. உலகுக்கான பெருமளவிலான எரிபொருள் விநியோகம் இந்தப் பாதை வழியாகவே நடைபெறுகின்றது.

எனவே, இப்பகுதியில் மோதல்கள் ஏற்படுவதை நாம் எக்காரணம் கொண்டும் விரும்பவில்லை.

இந்து சமுத்திரத்தில் மோதல்கள் நீடித்தால், அது இலங்கையின் பொருளாதாரத்தில் நேரடித் தாக்கத்தைச் செலுத்தும். கடல் வழிப் போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டால் வர்த்தகம் பாதிக்கப்படும்.

மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கையர்களிடமிருந்து கிடைக்கும் வருவாய் குறையக்கூடும். பிராந்திய அமைதியின்மை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை பாதிக்கப்படலாம்.

இந்தப் போர்ச்சூழல் சில வாரங்களுக்குள் முடிவுக்கு வந்தால் பெரிய பாதிப்புகள் இருக்காது. ஆனால் இது நீண்டகாலம் நீடித்தால், இலங்கை கடுமையான பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். எனவே, அனைத்துத் தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்." என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்து மறையாத

# ஓராண்டு நினைவில்...



## (1936-2025)

## உயர்திரு. செல்லையா பொன்னுசாமி

## (S.P சாமி)

ஸ்தாபகர் - தினக்குரல், யாழ்.தினக்குரல்

**Founder - Northern Central Hospital (pvt) Ltd.,**
**Northern Beach Hotel (pvt) Ltd., S.P.Samy Investment Complex (pvt) Ltd.**

முன்னாள் தலைவர் - வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்,
முன்னாள் தலைவர் வடகொழும்பு இந்துபரிபாலன சங்கம், முன்னாள் உபதலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம்,
முன்னாள் உப தலைவர் - சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் நம்பிக்கை நிதியம், முன்னாள் தலைவர் - புறக்கோட்டை வர்த்தகர் சங்கம்

வேலணையில் விளைந்த
உழைப்பின் விதை
வாழ்க்கை பாதையில்
உயர்ந்த விருட்சம்
சோதனைகள் கண்டு
சோர்வடையாத மனம்
மனித நேயத்தை
மறக்காத மனிதம்

சமூக நலனை என்றும்
சிந்தித்த நல் இதயம்
உழைப்பில் நேர்வழி
குணத்தில் ஓர் வழி
மௌனம் அவர் மொழி
சமூகம் சாமியின்
இன்னொரு விழி

மருத்துவ சேவையால்
நிலையானவர்
ஊடகத்தால் தினம்
தமிழர்காய் பேசியவர்
சாமியார் கண்ட
கனவுகள் ஏராளம்
சமூகத்துக்காய்
செய்தவை தாராளம்
தன்னம்பிக்கையின்
அடையாளம்
நீங்கள் விதைத்த
நன்மைகள்
காலம் கடந்தும்

அறுவடையாகும்
உங்கள் உழைப்பும்
சமூக அக்கறையும்
தலைமுறைகள்
கடந்தும் பேசும்...
சாமி..! சாமியானார்..!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!

**யாழ்.தினக்குரல்**

**Northern Central Hospital**

**குடும்பத்தினர்**

(C-5162)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 56 ஆண்டுகள் பழமையான இலங்கை மின்சார சபை கலைக்கப்பட்டது!

## 6 அரச நிறுவனங்களாக மின்சாரத்துறை மறுசீரமைப்பு

(கொழும்பு)

**இலங்கையின் மின்சக்தித் துறையில் 56 ஆண்டு காலப் பழமையான இலங்கை மின்சார சபை நேற்று நள்ளிரவுடன் கலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஆறு அரச நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.**

1969ஆம் ஆண்டு 17ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இயங்கி வந்த மின்சார சபை, இனி மின் உற்பத்தி, மின் விநியோகம், கடத்துகை மற்றும் கட்டமைப்பு இயக்கம் என ஆறு தனித்தனி நிறுவனங்களாகச் செயற்படும்.

2024ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் எஞ்சிய விதிகள் இதன் மூலம் நடைமுறைக்கு வருகின்றன.

விருப்ப ஓய்வுத் திட்டத்தைத் தெரிவு செய்யாத ஊழியர்கள் அனைவரும் இந்தப் புதிய ஆறு நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று முதல் வழங்கப்படும் என மின்சார சபையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கையினால் நாட்டில் மின் உற்பத்தி அல்லது மின் விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என உறுதி அளிக்கப்பட்டுள்ளது. (நி)

## குறைவடைந்த தங்கத்தின் விலை

(கொழும்பு)

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக சர்வதேச சந்தையில் தங்கத்தின் வீலை வீழ்ச்சியடைந்ததை போன்று இலங்கையிலும் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

நேற்று தங்கவிலை 4,000 ரூபாயாக குறைந்துள்ளது.

அந்தவகையில், இலங்கையில் தற்போதைய தங்க விலை நிலவரப்படி,

24 கரட் தங்கம் பவுண் ஒன்று 408,000 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது.

22 கரட் தங்கம் பவுண் ஒன்று 377,400 ரூபாயாகவும், விற்பனை செய்யப்படுகிறது. (நி)

## ஜனவரி-மார்ச் 2 ஆம் திகதிவரை 3,642 வீதி விபத்துகள்!

### 422 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் வீதி விபத்துக்களினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


பொலிஸ் ஊடகப் பிரிவின் தகவல்களின்படி, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 2 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மட்டும் நாடு முழுவதும் மொத்தம் 3,642 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு இடம்பெற்ற விபத்துக்களில் 405 விபத்துக்கள் பாரிய உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளன. இவற்றில் மொத்தம் 422 பேர் உயிரிழந்துள்ளதுடன் இவற்றில் படுகாயங்களை ஏற்படுத்திய 866 விபத்துக்கள் பாரதூரமானவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் 641 விபத்துக்களில் வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்குச் சேதங்களை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

"மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் பதற்றமான சூழலால் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை" என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார்.

ஈரானிய மாலுமிகள் மீதான தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து எழுந்துள்ள பாதுகாப்புச் சந்தேகங்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கை எப்போதும் ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டே செயற்படுகின்றது. தற்போதைய சூழலில் நாம் மனிதாபிமானத்துக்கே முதலிடம் வழங்கி வருகின்றோம். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசு மிகுந்த பொறுப்புடன் செயற்பட்டு வருவதால், பொதுமக்கள் இது குறித்து எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை.

அமெரிக்கத் தாக்குதலில் உயிரிழந்த ஈரானிய மாலுமிகளின் ஜனாஸாக்களை விரைவில் ஈரானுக்கு அனுப்பி வைப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மனிதாபிமான அடிப்படையில் இந்தச் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு விவகாரங்களில் இலங்கை நடுநிலையைப் பேணுவதோடு, தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

## பிரதமர் ஹரிணி பிலிப்பைன்ஸ் விஜயம்



(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் விசேட அழைப்பின் பேரில், சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று முன்தினம் நள்ளிரவு பிலிப்பைன்ஸின் மணிலா நகருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புறப்பட்டுச் சென்றார்.

மணிலாவிலுள்ள நினோய் அக்வினோ சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்த பிரதமரை, பிலிப்பைன்ஸிற்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி சானக்க தல்பஹேவா, பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து வரவேற்றனர்.

இந்த விஜயத்தின் முக்கிய அங்கமாக, மணிலாவிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையகத்தில் நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தின விழாவில் பிரதமர் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன், இந்த விஜயத்தின் இடையே பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தின் பல அமைச்சர்களுடன் பிரதமர் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவுள்ளார். இதன்போது இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கிடையிலான பரஸ்பர நலன்சார் விடயங்கள் குறித்தும், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது. (நி)

## மத்திய கிழக்கு போர் எதிரொலி

### இலங்கையின் சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி

(கொழும்பு)

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள வான் வெளிப் போக்குவரத்துத் தடைகள் காரணமாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் நான்காம் திகதி வரையிலான காலப்பகுதியில் 23,116 பயணிகள் மட்டுமே இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் (30,824) ஒப்பிடுகையில் 25 வீத வீழ்ச்சியாகும்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் சுமார் 34 வீதமானோர் மத்திய கிழக்கு நாடுகளின் வானூர்தி முனையங்கள் ஊடாகவே பயணிக்கின்றனர்.

போர் காரணமாக வான் வெளிகள் மூடப்பட்டுள்ளதாலும், ஆயிரக்கணக்கான வானூர்தி சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாலும் ஐரோப்பிய பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்துள்ளது. (நி)

## 3,700மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம்

(கொழும்பு)

உள்நாட்டு சந்தைக்கு 3,700 மெட்ரிக் தொன் எல்பி எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படும் என லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது. அண்மைக் காலங்களில் மொத்தம் 7,900 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

மார்ச் மாதத்திற்காக 38,000 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்கள் கோரப்பட்டுள்ளது. கூடுதலாக 30,000 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்கள் தற்போது மாலைதீவில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

கோரப்பட்டுள்ள மற்றுமொரு கப்பல், 33,000 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்களுடன் மார்ச் 17ஆம் திகதி மாலைதீவை வந்தடைய உள்ளது.

இதேவேளை, அண்மையில் இலங்கையை வந்தடைந்த கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட 3,700 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கும் பணிகளைத் தமது நிறுவனம் நேற்று முதல் முன்னெடுத்து வருவதாக லாஃப்ஸ் கேஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நலிந்த குருகுலசூரிய தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின அழிப்பில் ஈடுபட்டவர்கள் மனிதாபிமானத்தை பற்றி பேசுகின்றனர்

## ரவிகரன் எம்.பி



(முல்லைத்தீவு)

**கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையைச்செய்த கொடுரர்கள் தற்போது மனிதாபிமானிகளாகமாறி மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழலுக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பது வேடிக்கையாக இருப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங் கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள் ளார்.

மேலும், அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது வருடங்களைக் கடந்துள்ளது. பத்தாவது வருடம் ஆரம்பிக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைக்கேட்டு அவர்களின் போராட்டம் தொடர்கின்றது. அவ்வாறு தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பலநூற்றுக்கணக்கான பெற்றோர்கள் நோய்வாய்ப்பட்டும், வயது முதிர்வினாலும் உயிரிழந்துள்ளனர்.

எனினும் கடந்த கால ஆட்சியாளர்கள் இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான தீர்வை வழங்கும் விவகாரத்தில் பாராமுகத்துடனேயே செயற்பட்டவந்தனர்.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கத்திடம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான உரிய நீதியை வழங்குமாறு எம்மால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இருப்பினும் இதுவரை இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியை வழங்குவதற்கு இந்த ஆட்சியாளர்களும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

மேலும் 2009 இல் திட்டமிட்டவகையில் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள்ளும் குண்டு போட்டும், தடைசெய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளைப் போட்டும் தமிழ் இனஅழிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்ட கொடூரர்களின் கூடாரத்தைச் சேரந்தவர்கள் தற்போது மத்திய கிழக்கில் இடம்பெறும் போர்ச் சூழலுக்கு அனுதாபம் தெரிவிக்கின்றனர். தற்போது மனிதாபிமானத்தைப்பற்றிப் பேசுகின்றனர்.

எனவே தற்போதைய அரசு இந்த வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியை வழங்க முன்வர வேண்டும் எனவலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (8)

# அநாமதேய அழைப்பு

## அவதானத்துடன் செயற்படுங்கள்

### யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

அஸ்வெசும பயனாளிகளிடம் அநாமதேய தொலைபேசி அழைப்பு எடுத்து தங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும், தங்கள் தொலைபேசி இலக்கத்திற்கு வரும் OTP இலக்கத்தினை தெரிவிக்குமாறு கோருகின்றார்கள்.

அதன் உண்மைத் தன்மை அறியாத சில பொதுமக்கள் தொலைபேசிக்கு வரும் OTP இலக்கத்தினை தெரியப்படுத்துவதன் மூலம் அவர்களுக்குரிய வங்கிக் கணக்கிலிருந்து இணையமூலம் பணம் களவாடப்படுகின்றன.

எனவே இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் தமது தொலைபேசி இலக்கத்திற்கு வரும் OTP இலக்கத்தினை ஏனையவர்களுக்கு பகிர்வதனை தவிர்க்குமாறும் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (8)



தமிழர்களின் பாரம்பரிய கலையான சிலம்பம் பயிற்சியானது கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் உள்ள VMCT கலை மன்றத்தில் ஆசிரியர் அன்ரன் பெசன் பேர்க் மெல்சின் தலைமையில் நடைபெற்றது.



முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் மாதாந்த வெளியீடான "கலைஞனின் குரல்" இதழ் - 8 வெளியீட்டு விழா மன்றத்தின் தலைவர் இரா. மதிகரன் தலைமையில் பாசையூர் சென் அன்ரனிஸ் றோ.க. மகளிர் பாடசாலையில் கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுகாதார மேம்பாட்டை நோக்கிய பயணத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் செல்லத்துரை பிரசாத் எழுதிய "மாரடைப்பு நோய் பொதுமக்களுக்கான ஒரு வழிகாட்டி" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பொது வைத்திய நிபுணர் மருத்துவர் க.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையினை யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் மருத்துவர் சி. சிவன்சுதன் வழங்கவுள்ளார். (8)

# மெய்வல்லுநர் போட்டி

(அராலி)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டியானது இன்றைய தினம் கல்லூரியின் மைதானத்தில், பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் முதல்வர் சி.தனஞ்சயன் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டியில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சத்தியசீலன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கின்றார். (8-104)

(கச்சாய்)

யா/கச்சாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பதில் அதிபர் ந.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிவலயக் கல்வி நிர்வாக பிரதிக் கல்விபணிப்பாளர் சுப்பிரமணியம் ஸ்ரீ குமரன் கலந்து கொள்ளவுள்ளார். (8)

(கைதடி)

கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல்1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடை பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நாகலிங்கம் கருணாகரன் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய கணக்காளர் சோமசுந்தரம் பிரபு கலந்து கொள்ளவுள்ளார். (8)

# 7 கிலோ தங்கத்துடன் யாழில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பெருந்தொகை தங்கத்தை கடத்திச் செல்ல முற்பட்ட இருவரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மாதகல் கடல் வழியாக இந்தியாவிற்கு படகொன்றில் தங்கம் கடத்திச் செல்லப்படுவதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த படகினைக் கடலில் வழிமறித்து கடற்படையினர் சோதனையிட்ட வேளை படகில் இருந்து 7 கிலோ 85 கிராம் தங்கக் கட்டிகளை மீட்டுள்ளனர்.

அதனையடுத்து படகில் இருந்து இருவரையும் கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும், மீட்கப்பட்ட தங்கத்தையும், தங்கத்தை கடத்தி செல்ல பயன்படுத்தப்பட்ட படகினையும் மேலதிக நடவடிக்கைக்காக காங்கேசன்துறை சுங்க அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (8-33)

# மகளிர் தின நிகழ்வு

(சாவகச்சேரி)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன் விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலாளர் இ. விஜயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக [illegible] கலந்து கொள்ளவுள்ளார். (8-30)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர்களின் சேவையை பாராட்டி அவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வானது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(படம்:- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்ற வலயமட்டப் பூப்பந்தாட்டப் போட்டியில் யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் 18 வயதுப் பிரிவு ஆண்கள் இரண்டாம் இடத்தினையும், 18 வயதுப்பிரிவு பெண்கள் மூன்றாம் இடத்தினையும் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# முல்லைத்தீவில் நடைபெற்ற பூப்பந்தாட்ட பயிற்சி முகாம்



முல்லைத்தீவு மாவட்ட இளையோரின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் 13 வயதிற்குட்பட்ட ஆண் மற்றும் பெண் இளையோருக்கான பூப்பந்தாட்ட பயிற்சி முகாம் மற்றும் போட்டி நிகழ்வு கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட பூப்பந்தாட்ட உள்ளக அரங்கில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுதுறை பூப்பந்தாட்ட சங்கம் மற்றும் வட மாகாண பூப்பந்தாட்ட சங்கம் இணைந்து, தமிழர் புலம் பெயர் பூப் பந் தாட்ட அமைப்பான UBF அமைப்பின் நிதி அனுசரணையுடன் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இளையோரின் பூப்பந்தாட்ட விளையாட்டு திறனை வளர்த்தெடுத்து எதிர் காலத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்கில் இந்த பயிற்சி செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(3-299)

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 28.11.1951 உதிர்வு 07.03.2026



எமது கல்லூரியின் உப அதிபர்
திருமதி.ஜெயந்தி நவசீலன்
அவர்களின் அன்பு மாமியார்

## அமரர். வரதலட்சுமி கணேசலிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரமடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(7011)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

# மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 17.03.2026 திகதி வரை மீட்டெடுக்கப்படாத /புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 9.00 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 18.03.2026 மற்றும் 19.03.2026**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/ பல்கலைக்கழகம், யாழ்/ கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 021-222 2601 , 021-222 2602

(c-5164)

PEOPLE'S BANK
Pride of the Nation

# யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை


**பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்-2026**

எமது பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமானது 14.03.2026 சனிக்கிழமை மு.ப 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ளதால் அனைத்துப் பெற்றோர்களும் வருகை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-5161) அதிபர்.

# மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அளப்பரிய கல்விப் பணியாற்றி மணிவிழாக் காணும்



## உயர்திரு. சின்னையா பாஸ்கரன்

கோட்டக் கல்விப் பணிப்பாளர் –புதுக்குடியிருப்பு

**சேவை விபரம்**

- மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் –03.10.1994 – 06.10.2002
- மு/முத்தையன் கட்டு இடதுகரை அ. த. க. பா – 07.10.2002 – 31.01.2007
- மு/முள்ளிவாய்க்கால் அ.த.க.பா – 01.02.2007 – 22.04.2007
- மு/விசுவமடு மகா வித்தியாலயம் –23.04.2007 – 12.11.2009
- மு/ விசுமடு மகா வித்தியாலயம் – அதிபர்– SLPS 2 II – 13.11.2009 –09.03.2010
- வ/ இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம் –10.03.2010 – 22.09.2015
- மு/செம்மலை மகா வித்தியாலயம் –23.09.2015 – 22.05.2021
- புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் –23.05.2021 – 09.03.2026

09.03.2026 அன்று ஓய்வு பெற்ற உயர்திரு. சின்னையா பாஸ்கரன் அவர்களுக்கு இனிய மணி விழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வு காலம் சிறப்பாக அமைய பிரார்த்திக்கின்றோம்.

(C-5165)

Wish You All the Best

வாழ்த்துவோர்-
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு.

# யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான மீள் கூறுவிலை கோரல்-2026**

2026 ஆம் ஆண்டின் பண்டிகைக் காலங்களில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் விற்பனை நடவடிக்கையினை மேம்படுத்த விரும்பும் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சபையில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக நேரத்தில் ரூபா 100 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரரினால் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையாக ரூபா 5000.00 செலுத்தப்படுதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தபால் உறையில் இட்டு பதிவுத் தபாலில் "கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினைப் பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான மீள் கூறுவிலை" எனக்குறிப்பிட்டு 17.03.2026 இற்கு முன்னதாக கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப 2 ஆவது மாடி,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல.12, கே.கே.எஸ் வீதி,


(C-5160)

செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ‘ஆயுதங்கள் மௌனிக்கட்டும்’ போப் 14ஆம் லியோ உருக்கம்



(வத்திக்கான்)

ஈரானில் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர போப் 14ஆம் லியோ அழைப்பு விடுத்துள்ளார்.

மோதல்; லெபனான் உட்பட முழு மத்திய கிழக்கையும் ஸ்திரமின்மைக்கு ஆளாக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இது குறித்து உரையாற்றிய அவர், ஈரான் மற்றும் மத்திய கிழக்கிலிருந்து வந்த செய்திகள் தன்னை ஆழ்ந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியதாக கூறியுள்ளார்.

வெறுப்பு மற்றும் பயம் நிறைந்த தற்போதைய சூழலில், இந்த மோதல் மேலும் பரவி லெபனான் போன்ற நாடுகள் மீண்டும் நிலையற்றதாக மாறும் என்ற அச்சம் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, வன்முறை மேலும் அதிகரிப்பதற்கு முன்பு அதை நிறுத்த அனைத்துத் தரப்பினருக்கும் தார்மீக பொறுப்பு உள்ளது என்று போப் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், “குண்டுகளின் பயங்கரமான சத்தம் நிறுத்தப்பட வேண்டும், ஆயுதங்கள் மௌனமாக்கப்பட வேண்டும், மக்களின் குரல் கேட்கும் உரையாடல் சூழல் உருவாக வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்.” என அவர் கூறியுள்ளார்.

மேலும், அயதுல்லா அலி கமேனியின் படுகொலையைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலைமை குறித்த கருத்து தெரிவித்துள்ள போப் லியோ, “பரஸ்பர அச்சுறுத்தல்கள் மூலம் அல்ல, நேர்மையான மற்றும் பொறுப்பான பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே அமைதியை அடைய முடியும்” என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (3)



## சர்வதேச எ... அவசரகால என்... பகிர்ந்துகொள்...

சர்வதேச எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வாக தம்மிடமுள்ள அவசர கால எண்ணெய் இருப்புக்களை பகிர்ந்துகொள்ள ஜி7 நாடுகள் முன் வந்துள்ளன.

சர்வதேச சந்தையில் நிலவும் எரிசக்தி நெருக்கடியைச் சமாளிக்க, தமது அவசரகால எண்ணெய் இருப்புகளைக் கூட்டாக வெளியிடுவது குறித்து ஜி7 நாடுகளின் நிதியமைச்சர்கள் நேற்று திங்கட்கிழமை ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இதில் கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிதியமைச்சர்களே கலந்து கொண்டிருந்தனர்.

சர்வதேச எரிசக்தி முகாமை

## அமெரிக்காவிற்கு உதவத் தயார் உக்ரைன் ஜனாதிபதி அதிரடி!

(கீவ்)

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டுள்ள பொதுமக்கள் மற்றும் அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு உதவி வழங்குவதற்காக உக்ரைன் தனது நிபுணர்களின் குழுக்களை அனுப்ப திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை எதிர்கொள்ளும்போது பொதுமக்களுக்கும் அமெரிக்க துருப்புக்களுக்கும் உதவுவது குறித்து பல செய்திகள் தனக்கு வந்ததாக ஜனாதிபதி தனது எக்ஸ் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

“அவர்களைப் பாதுகாக்கவும், எங்கள் நிபுணர்களை அனுப்பவும் தேவையான எந்தவொரு உதவியையும் வழங்க நாங்கள் ஒப்புக்கொண்டோம்,” என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

கடந்த வாரம் முழுவதும், ஈரானில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள அமெரிக்கக் கட்சிகள் உக்ரைனிடம் ஆலோசனை கோரியுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (3)



## பதவியேற்ற சிலமணி... இஸ்ரேல் மீது ஏவுகண...

(டெஹ்ரான்)

ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா கமேனியின் தலைமையின் கீழ் இஸ்ரேல் மீது முதற்கட்ட ஏவுகணைத் தாக்குதல்களை ஈரான் ஆரம்பித்துள்ளது.

இதனை அந்நாட்டு அரச ஒளிபரப்பு நிறுவனமான IRIB உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், ஈரானின் அரச ஊடகமான IRIB தனது டெலிகிராம் சேனல் வாயிலாக இந்தத் தாக்குதல் குறித்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில், முன்னாள் உச்ச தலைவர் அலி கமேனியின் மறைவுக்குப் பிறகு, அவரது மகன் மொஜ்தபா கமேனி பதவியேற்றதைத் தொடர்ந்து இஸ்ரேல் மீது நடத்தப்படும் முதல் நேரடித் தாக்குதல் இதுவாகும்.

குறித்த தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஏவுகணை ஒன்றில் “உங்கள் சேவையில், செய்யித் மொஜ்தபா என்ற வாசகம் பொறிக்கப்பட்ட புகைப்படத்தை ஈரான் வெளியிட்டுள்ளது.


ஈரானின் இந்த அதிரடித் தாக்குதலால் மத்திய கிழக்கில் போர் பதற்றம் மீண்டும் உச்சக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ாரிசக்தி நெருக்கடி
# ன்ணெய் இருப்புக்களை
# ள ஜி7 நாடுகள் திட்டம்




யுடன் ஒருங்கிணைந்து, இந்த எண்ணெய் இருப்புகளைச் சந்தைக்கு விடுவிப்பது குறித்து "பைனான்சியல் டைம்ஸ்" செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு அமெரிக்கா உள்ளிட்ட மூன்று ஜி7 நாடுகள் ஏற்கனவே தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் மசகு எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்தவும், விநியோகத் தடையைச் சீர் செய்யவும் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. ஆலோசனையின் முடிவில் இது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக அல் ஜெசீரா செய்தி வெளியிட்டுள்ளது. (3)

# ஈரானின் இறையாண்மைக்கு மதிப்பளிக்க வேண்டும் சீனா



(பீஜிங்)

ஈரானின் புதிய அதியுயர் தலைவராக மொஜ்தபா கமேனி நியமிக்கப்பட்டது தொடர்பில் சீனாவின் வெளிவிவகார அமைச்சு கருத்து வெளியிட்டுள்ளது. இது ஈரானின் உள்நாட்டு விவகாரம் என்று சீனா சுருக்கமாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சின் செய்தித் தொடர்பாளர் குவோ ஜியாகுன் தெரிவிக்கையில், இது ஈரானிய அரசியலமைப்பின் அடிப்படையில் அந்நாட்டுத் தரப்பால் எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும் எனத் தெரிவித்தார்.

சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங்யீ, ஈரானின் இறையாண்மைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று நேற்று கோரிக்கை விடுத்ததுடன், அந்நாட்டின் ஆட்சி முறையை மாற்றியமைக்க முயலும் வெளிப்புற முயற்சிகளுக்கு எதிராக எச்சரிக்கையும் விடுத்தார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது,


வண்ணப் புரட்சியைத் திட்டமிடுவதோ அல்லது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயல்வதோ மக்களிடையே எவ்வித ஆதரவையும் பெறாது.

மத்திய கிழக்கின் விவகாரங்களை அந்தந்த பிராந்திய நாடுகளே சுதந்திரமாகத் தீர்மானிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (3)

# ி நேரத்தில்
# ணை மழை

கட்டத்தை எட்டியுள்ளதுடன் இஸ்ரேல் இதற்கு எந்நேரமும் பதிலடி கொடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரானின் புதிய தலைமை தனது அதிகாரத்தை நிலைநாட்டும் வகையில் இஸ்ரேல் மீதான இந்தத் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளதாகச் சர்வதேச தரப்பில் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)



# ஹார்முஸ் நீரிணை மூடல்; ஈராக் கடும் எச்சரிக்கை

(பாக்தாத்)

ஹார்முஸ் நீரிணையின் தற்போதைய நிலைமையும், மோதல்கள் விரிவடைந்து வருவதும் ஒரே நேரத்தில் பல நெருக்கடிகளைத் தூண்டக்கூடும் என்று ஈராக் வெளியுறவுத்துறை அமைச்சர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அரபு லீக் நாடுகளின் கூட்டத்தில் பேசிய புவாட் ஹுசைன், இந்த முக்கியமான நீர்வழிப்பாதை மூடப்படுவது "ஈராக், பிராந்திய நாடுகள் மற்றும் உலகின் நலன்களில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும்" என்று கூறியுள்ளார்.

"எரிசக்தி விநியோகம் மற்றும் விலையேற்றத்தில் நெருக்கடிகள், பிராந்தியத்தில் பரவலான ஆயுதக் குழப்பம் மற்றும் பெருமளவிலான இடப்பெயர்வு அல்லது புலம்பெயர்வு ஆகியவை இதன் பிற விளைவுகளாக இருக்கலாம்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஹார்முஸ் நீரிணை வழியாக கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்யமுடியாத நிலை நீடிப்பதால், கடந்த சில நாட்களில் ஈராக்கின் முக்கிய வயல்களில் இருந்து பெறப்படும் எண்ணெய் உற்பத்தி சுமார் 70 சதவீதம் வரை குறைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடங்களின் பின்னர் சொந்த இடத்தில் அஞ்சல் அலுவலகம்



(முரசுமோட்டை)

முரசுமோட்டை உபஅஞ்சல் அலுவலகம் 30 வருடங்களின் பின்னர் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

1996ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தில் கட்டடம் முற்றாகச் சேதமடைந்ததைத் தொடர்ந்து இடம்பெற்ற இடப்பெயர்வு காரணமாக வெவ்வேறு இடங்களில் குறித்த அஞ்சல் அலுவலகம் இயங்கி வந்தது.

இந்நிலையில் பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மக்களின் பங்களிப்புடன் முரசுமோட்டைப் பகுதியில் புதிதாக கட்டடம் அமைக்கப்பட்டு நிரந்தர கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. (8-312)

## கல்மடுக் குளத்தின் கீழ்

# 2 ஆயிரத்து 452 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடுக் குளத்தின் கீழ் 2 ஆயிரத்து 452 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கல்மடுக்குளத்தின் கீழ் 2026ஆம் ஆண்டுக்கான சிறுபோக அளவைத் தீர்மானிக்கும் கலந்துரையாடல் அண்மையில் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்திற்கு அடுத்த பெரிய நீர்ப்பாசனக் குளமாகிய கல்மடுக் குளத்தின் கீழ் 2 ஆயிரத்து 452 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (8-316)



சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் ஏற்பாட்டில் மகளிர்தினக் கொண்டாட்டம் சி.பி.ஆர் அமைப்பின் இயக்குநர் அருட்தந்தை ஜீவரட்ணம் தலைமையில் முள்ளியவளை வடக்கு கிராம சேவகர் அலுவலகத்தில் கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது. (படம் - சதீஸ்)

# மெய்வல்லுநர் போட்டி

(கரவெட்டி)

யாழ்.கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சதானந்தன் செல்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம அதிதிகளாக பொறியியலாளர் கலாமணி முரளீதரன், யாழ்.மெதடிஸ் பெண்கள் கல்லூரி ஆசிரியர் திருமதி லக்சனா முரளீதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 250 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | -- | 320 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 350 | 350 | 300 |
| தக்காளி | 100 | 80 | 150 | 100 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 180 | 200 | 200 | 100 |
| கோவா | 100 | 80 | 200 | 120 | 120 |
| கரட் | 250 | 420 | 400 | 400 | 330 |
| பூசணி | 120 | 120 | 150 | 100 | 80 |
| புடோல் | 150 | 200 | 150 | 150 | 110 |
| வாழைக்காய் | 180 | 150 | 200 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 180 | 240 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 180 | -- |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 300 | 350 |
| வெண்டக்காய் | 200 | 200 | 300 | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 300 | 300 | 400 | -- | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 450 | 250 | 250 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 300 | 220 |
| பீற்றூட் | 100 | 80 | 150 | 100 | 130 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | -- | 4000 | -- | 2500 | -- |
| போஞ்சி | 300 | 300 | 500 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 | -- | -- |
| கீரை – 1 பிடி | 140 | 80-140 | 120 | -- | 90 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 150 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 80-130 | -- | 120 |
| இராசவள்ளி | 400 | 450 | 350 | -- | 350 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 250 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 80 | -- | 70 |
| ஈரப்பலா | 100 | 200 | 150 | -- | 100 |

# இராசிபலன்

10.03.2026
மாசி 26, செவ்வாய்க்கிழமை
சப்தமி பின்னிரவு 1.44 மணிவரை

அனுஷம் முன்னிரவு 7.01 மணிவரை
சுப நேரம் 10.53 - 12.23 மணிவரை
இராகுகாலம் 3.23 - 4.53 மணிவரை

சந்திராஷ்டமம்:
அசுவினி, பரணி

வளவன்

**மேஷம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையலாம், வழிபாட்டில் அமைதி காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல்நலனில் கவனம் தேவை.

**கடகம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெற்றோர் மீதான பாசம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், சுபகாரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்** கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், காரிய நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**சிம்மம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வெளியூர்ப் பயணங்களால் பலனுண்டு, சேமிப்பை உயர்த்திடும் எண்ணம் உருவாகும். நண்பர்களின் சந்திப்புண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குறை அறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியம் விரும்பியபடி கைகூடும், வழிபாடு குதூகலம் தரும், போசன சுகமுண்டு.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் கூடும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், உடல் நலன் சீராகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கன்னி** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்ளும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், விலகிச் சென்றவர்கள் திரும்ப வந்து சேரலாம், புதிய முயற்சியில் ஆர்வம் கூடும், சான்றோர்களின் சந்திப்புண்டு.

தவறான தீர்மானங்கள் தவறான விளைவுகளைக் கொண்டு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 01 X

## யாழ்.போதனா வைத்தியசாலை



புருசோத்தமன்

(நேற்றைய தொடர்ச்சி)

உலகில் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பது மரணமாகவே இருக்க முடியும்.

எவர் நூறு வயதில் மரணித்தாலும் கூட அவரின் நினைவுகள் அவர் சார்ந்தவர்களை நெருடவே செய்யும்.

தவிர, எதிரிக்கும் தலை தாழ்த்துகின்ற ஓர் இடம் உண்டெனில், அது மரணமாக மட்டுமே இருக்க முடியும்.

இருந்தும் இவற்றையும் கடந்து மரணத்திலும் பணம் பறிக்கின்ற ஒரு கூட்டம் இருக்குமென்றால், அதை விட்ட மிலேச்சத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஆம், கற்பனையில் கூட நினைக்க நெஞ்சம் பதை பதைக்கின்ற அந்தக் காரியம் நம் மத்தியிலும் நடந்தாகிறது.

என்ன செய்வது பிணங்களோடு காலம் கழிக்கின்ற அந்த சூழ்நிலைகள் உயிருள்ள மனிதர்களின் மனங்களையும் மரணிக்கச் செய்து விட்டது போலும்.

ஏழை-பணக்காரர் என்ற பேதமின்றி, இறந்தவர்களின் அவலங்கள் பற்றி ஒரு கணமும் சிந்திக்காமல் பணத்தை எதிர்பார்க்கின்ற அந்தக் கணம் மனித வாழ்வை வெறுக்க வைப்பது.

என்ன செய்வது பிணங்களை நாடுகின்ற கழுகுகளின் படைப்புக்களும் அந்தப் பிரம்மாவின் ஒரு பிடி மண்ணில் உற்பவமாகியவை என்பதால் எல்லாவற்றையும் தாங்குதல் நம் கடனாயிற்று.

ஆயினும் இறந்தவர் யார்? அந்தக் குடும்பத்தின் நிலை எவ்வாறாக? உள்ளது என ஒரு கணம் அறிந்து தனம் மிகுந்தவர்களாயின் அவர்களிடம் பணத்தை எதிர்பார்ப்பதும் ஏழைகள் என்றால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதும் அறம் சார்ந்தது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### அந்தியாகால சேவை

உலகில் மிகப் பெரிய புலனாய்வு எது என்று கேட்டால், மொசாட் எனப் பலரும் பதிலளிப்பர். ஆனால் எம்மைப் பொறுத்த வரை யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட அந்தியாகால சேவையினர் தான் இந்த உலகின் முதற்தரப் புலனாய்வு என்போம்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவுகளில் மற்றும் விடுதிகளில் தங்கியிருந்த நோயாளர்கள் இறந்து விட்டால், அந்தத் தகவல் சம்பந்தப்பட்ட விடுதி மருத்துவருக்கு-சம்பந்தப்பட்டவருடன் உடனிருந்த பராமரிப்பாளருக்கு-இறந்தவரின் குடும்பத்தினருக்கு தெரிய முதல், அந்தியாகால சேவையினருக்கு தெரிந்து விடுகிறது எனில், அவர்களின் புலனாய்வு-அவர்களுக்குத் தகவல் வழங்குவதை மிகவும் சிறப்பாகச் செய்கின்ற ஒரு குறிப்பிட்ட சுகாதாரப் பணியாளர்கள்-அவர்களுக்காக அந்தியாகால சேவையினர் வழங்குகின்ற கமிசன். அப்பாடா! ஒரு மனிதனின் வாழ்க்கையில் அவனின் இறுதிக்காலம் என்பது தான் மிகவும் ஆபத்தானது போல தெரிகிறது.

ஆம், யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒருவர் இறந்து விட்டால் இறந்தவரின் உறவினர்களை அந்தியாகால சேவையினர் சுற்றி வளைத்து விடுகின்றனர்.

ஏதோ தாங்களே எல்லாக் காரியங்களையும் செய்து இறந்தவரின் உடலை வெளியில் எடுத்து விடுவோம் என்பது போல அவர்களின் கதைகள் அமைந்திருக்கும்.

பரவாயில்லை. அந்தியாகால சேவை நிலையத்தை நடத்துகின்றவர்களின் இறை வழிபாடு என்பது அதிக வியாபாரம் நடக்க வேண்டும் என்பதாகவே இருக்கும்.

மாறாக, அதிதீவிர சிகிச்சை பிரிவிலும் விடுதிகளிலும் கடமையாற்றுகின்ற ஒரு குறிப்பிட்ட சுகாதாரப் பணியாளர்கள்; அந்தியாகால சேவை நிலையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் அற்ப சொற்ப சலுகைகளுக்காக இறப்புகளின் தகவல்களை வழங்குவதென்பது நீதியாகாது.

தவிர, இவ்வாறு தகவல்களை வழங்குகின்றவர்கள், ஒரு நோயாளி உயிர் பிழைக்க வேண்டும் என நினைப்பார்களா? என்ற ஐயத்தையும் அது ஏற்படுத்தும்.

ஆகவே தயவுசெய்து சுகாதாரப் பணியாளர்கள் அந்தியாகால சேவையினருக்குத் தகவல் வழங்குவதை முற்று முழுதாகத் தவிர்க்க வேண்டும்.

அதேநேரம் சிற்றூழியர்களை மேற்பார்வை செய்கின்ற உத்தியோகத்தர்கள் சிலர் அவர்களிடம் சலுகைகளை எதிர்பார்ப்பதாகவும் இவ்வாறு சலுகைகளை வழங்கிய சிற்றூழியர்கள் அவர்களுக்குக் கட்டுப்படாத நிலைமைகள் இருப்பதான தகவல்களும் உண்டு.

இவை சீராக்கம் செய்யப்பட வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

ஆக, ஒட்டுமொத்தத்தில் எங்கள் தமிழினத்தின் ஒரு பெரும் சொத்தாக இருக்கின்ற யாழ்.போதனா வைத்தியசாலை மிகச் சிறப்பாக இயங்கி, எம் மக்களுக்கு அரும்பணியாற்ற வேண்டும் என்ற தாழ்மையான கோரிக்கையை இத்தரிசனத்தின் ஊடாக முன்வைக்கின்றோம்.

(யாழ்.போதனா வைத்தியசாலை தரிசனம் முற்றுப்பெறுகிறது. அடுத்த தரிசனம் விரைவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர்

995





"மன்னிக்க வேண்டும். 'மகாவம்சம் படித்ததுண்டா?' என்று தங்களிடம் கேட்டது, தங்களுக்குப் படிக்கத் தெரியுமா என்று கேட்பது போலத்தான். ஆனால் அந்த 'மகாவம்சம்' கூறும் அரச பரம்பரையில் யார், யார் என்னென்ன பயங்கரமான கொடும் பாவங்களைச் செய்திருக்கிறார்கள் என்று தங்களுக்குத் தெரியும் அல்லவா? மகன் தந்தையைச் சிறையில் அடைத்தான்.

தந்தை மகனை வெட்டிக் கொன்றான். தாய் மகனுக்கு விஷமிட்டுக் கொன்றாள். தாயை மகன் தீயிலே போட்டு வதைத்தான். பெற்றோர்களுக்கும் பெற்ற மக்களுக்கும் உறவு இப்படி என்றால், சித்தப்பன்மார்கள், மாமன்மார்கள், சிற்றன்னை, பெரியன்னைமார்கள், அண்ணன் தம்பிமார்கள் இவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

குருதேவரே! இப்படிப் பட்ட கொடும் பாதகங்களை இலங்கை அரச குடும்பத்தினர் செய்தனர் என்று 'மகாவம்சம்' கூறுகிறதல்லவா?"

"ஆம், ஆம்! அத்தகைய தீச்செயல்களுக்கு அவரவர்கள் அடைந்த தண்டனைகளையும் கூறுகிறது. அந்த உதாரணங்களைக் காட்டி மக்களைத் தர்ம மார்க்கத்தில் நடக்கும்படி 'மகாவம்சம்' உபதேசிக்கிறது. அதை மறந்து விட வேண்டாம்! 'மகாவம்சம்' புனிதமான கிரந்தம். உலகிலே ஒப்புயர்வற்ற தர்ம போதனை செய்யும் நூல்!" என்று ஆச்சாரிபிக்கு பரபரப்புடன் கூறினார்.

"சுவாமி, 'மகா வம்சம்' என்ற நூலை நான் குறை சொல்லவில்லை. இராஜ்யாதிகார ஆசை எப்படி மனிதர்களை அரக்கர்களிலும் கொடியவர்களாக்கி விடுகிறது என்பதைப் பற்றித்தான் சொன்னேன். அத்தகைய கொடும் பாவங்களினால் களங்கமடைந்த இலங்கைச் சிம்மாதனத்தை நான் மறுதளித்தது தவறாகுமா?"

"மகா புத்திமான்களான புத்த சங்கத்தார் அதனாலேதான் இலங்கை அரச வம்சத்தையே மாற்ற விரும்பினார்கள். தங்களை முதல்வராகக் கொண்டு, புதிய வம்சம் தொடங்கட்டும் என்று எண்ணினார்கள்.

தாங்கள் அதை மறுத்தது தவறுதான். இலங்கைச் சிம்மாதனத்தில் வீற்றிருந்து அசோகவர்த்தனரைப் போல் உலகமெல்லாம் புத்த தர்மத்தைப் பரப்பிப் பாதுகாக்கும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைத்தது."

"குருதேவரே! பரத கண்டத்தை ஒரு குடை நிழலில் ஆண்ட அசோகவர்த்தனர் எங்கே? இன்று இந்தப் புத்த விஹாரத்தில் ஒளிந்து கொண்டு தங்கள் பாதுகாப்பை நாடியிருக்கும் இந்தச் சிறுவன் எங்கே? உண்மையில், தங்கள் சீடனாகக் கூட நான் அருகதையில்லாதவன், புத்த தர்மத்தை எப்படிப் பாதுகாக்கப் போகிறேன்?"

"இளவரசே! அவ்விதம் சொல்ல வேண்டாம். தங்களிடம் மறைந்து கிடக்கும் மகா சக்தியைத் தாங்கள் அறியவில்லை. தாங்கள் மட்டும் புத்த தர்மத்தை மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டால் அசோகரைப் போல் புகழ் பெறுவீர்கள்."


"என் உள்ளத்தில் இளம் பிராயத்திலிருந்து விநாயகரும் முருகனும், பார்வதியும், பரமேசுவரனும், நந்தியும் பிருங்கியும் சண்டிகேசுவரரும் கோயில் கொண்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## ஓடிப்போன வேடர்கள்



அது ஒரு சிறிய கிராமம். அந்த கிராமத்தில் சில வீடுகளே இருந்தன. அந்த கிராமத்திற்கு மத்தியில் ஒரு பெரிய கோயில் இருந்தது. அந்தக் கோயில் கோபுரத்தில் ஏராளமாய் புறாக்கள் வசித்து வந்தன.

அந்தக் கோயிலுக்கு வெளியே ஒரு பெரிய அரசமரம் இருந்தது. அந்த அரசமரத்தில் சில காகங்கள் கூடுகட்டி வசித்து வந்தன. அன்று காலை கோயிலை ஒட்டியிருந்த ஒரு வீட்டிலிருந்து ஒரு பெண்மணி காகத்தைக் கூவி அழைத்து பழைய சாதத்தை தெருவில் கொட்டினாள். இதை கவனித்த ஒரு காகம் உடனே குரல் கொடுத்தது. காகத்தின் குரலைக் கேட்டதும் நான்கு திசைகளிலிருந்தும் காகங்கள் அங்கே வந்தன.

எல்லா காகங்களும் ஒன்றாய் சேர்ந்து கிடைத்த உணவை பங்கு போட்டு சாப்பிட்டன. இதை அந்தப் பகுதியில் இருந்த ஒரு புறா கவனித்துக் கொண்டிருந்தது.

உணவை சாப்பிட்டு மரத்தில் அமர்ந்திருந்த காகத்திடம் அந்தப் புறா சென்றது."ஆமா. எல்லாரும் எப்பவும் ஏன் ஒன்றாகவே சாப்பிடுகிறீர்கள். யாருக்கு கிடைக்குதோ அவங்க மட்டும் சாப்பிட்டு விட்டு மீதியிருந்தால் பத்திரப்படுத்தி வைத்திருந்து அப்புறமாக சாப்பிடலாம் அல்லவா?"

கிடைக்கிற உணவை பங்கு போட்டு சாப்பிடறதுதான் எப்பவும் நல்லது. அப்பதான் நமக்குள்ளே அன்பும் ஒற்றுமை உணர்ச்சியும் வளரும்."

ஆனால், காகம் சொன்ன இந்தக் கருத்தை அந்தப் புறா ஏற்றுக் கொள்ளவில்லை.சரி, கொஞ்சமா கிடைச்சா என்ன பண்ணுவீங்க?

"எவ்வளவு கொஞ்சமா கிடைச்சாலும் சரி, கிடைத்ததை நாங்கள் எல்லோரும் சமமாக பங்கு போட்டு சாப்பிடுவோம். நிறைய கிடைச்சாலும் அதையும் சமமாக பங்கு போட்டு சாப்பிடுவோம்."சில நாட்கள் சென்றன.அந்தக் கிராமத்திற்கு அருகிலுள்ள ஓர் ஊரிலிருந்து சில வேடர்கள் வந்தார்கள்.

வில்லால் அவர்கள் கோயில் மதில்சுவரின் பொந்துக்குள் இருந்த புறாக்களை நோக்கி கற்களால் அடிக்க ஆரம்பித்தார்கள். அனுபவம் வாய்ந்த வேடர் களின் குறி தப்பவில்லை. வில்லிலிருந்து புறப்பட்ட கற்கள் புறாக்களைத் தாக்கின. அதில் இரண்டு புறாக்கள் அடிபட்டுக் கீழே விழுந்தன. அவர்கள் வில் மூலம் எறிந்த கல்ஒரு காகத்தின் மீது பட்டு அதுவும் கீழே விழுந்தது.

இதைக் கவனித்த மற்றொரு காகம் உடனே குரல் கொடுத்தது. அதன் குரலைக் கேட்டு அந்த பகுதியிலிருந்த அனைத்து காகங்களும் அங்கே உடனே வந்தன.

அடிபட்டு கீழே கிடந்த காகத்தைப் பார்த்து அவை கோபமடைந்தன. அவை ஆக்ரோஷமாக அந்த வேடர்களைச் சூழ்ந்து கொண்டு அவர்களைக் கொத்த ஆரம்பித்தன. காகங்களின் தாக்குதலை சமாளிக்க முடியாத அந்த வேடர்கள் வலியால் கத்திக் கொண்டே அந்த இடத்தில் இருந்து ஓடிப்போனார்கள்.

காகங்களின் இந்த செயலால் புறாக்கள் தப்பித்தன. அடிபட்டுக் கீழே விழுந்த புறாக்களை மற்ற புறாக்கள் காப்பாற்றின. இப்போது கூட்டத்திலிருந்து அந்தப் புறா காகத்திடம் அன்பான குரலில் பேசியது.

"ஒற்றுமை எவ்வளவு சக்தி வாய்ந்ததுன்னு இன்னைக்கு நான் உங்க மூலமா புரிஞ்சிகிட்டேன். அன்னைக்கு நீ சொன்னது சரிதான். இனி நான் கூட மற்ற புறாக்கள்கிட்டே ஒற்றுமையைப் பத்தி எடுத்துச்சொல்றேன்" இதைக் கேட்ட காகம் மகிழ்ச்சி அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது,
ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது.
– அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## உள்ளகப் பொறிமுறை ஒருபோதும் நீதியைத் தராது

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இழப்பீடு கேட்கவில்லை. மாறாக அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் எங்கே? அவர்களுக்கு நடந்தது என்ன? என்பதைத்தான் கேட்கிறார்கள்.

அவ்வாறு கேட்பதில் நியாயம் உண்டு. அதற்கான பதிலை வழங்குவது கட்டாயமானது என நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலக உத்தியோகத்தர்களுக்கு இடம்பெற்ற பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நீதியமைச்சர் ஹர்ஷன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேற்கண்டவாறு அவர் கூறியதனூடு ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம் தமிழ் மக்களின் வலியை உணர்ந்துள்ளது என எண்ணத் தோன்றுகிறது.

இருந்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன என்பதைக் கண்டறிவதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதும் உள்ளகப் பொறிமுறையினூடே எட்டப்பட வேண்டும் என நீதியமைச்சர் ஹர்ஷன கூறியிருப்பதுதான் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

ஆம், உறவுகளைப் பறிகொடுத்தவர்கள் தமிழ் மக்கள். அதிலும் அவர்கள் தங்கள் பிள்ளைகளை, உறவுகளைப் பலர் சாட்சியங்களாக இருக்க; படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு படையினரிடம் ஒப்படைத்த தங்கள் பிள்ளைகளுக்கு நேர்ந்த கதியை 17 ஆண்டுகள் கடந்த போதிலும் இன்னமும் கண்டறியமுடியவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், உள்ளகப் பொறிமுறையினூடு தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்குமா என்பதுதான் நம் கேள்வி.

ஆக, தமிழ் மக்களின் இழப்புகளை ஏற்றுக் கொள்கிறோம். அவர்களின் வலியை உணர்ந்து கொள்கின்றோம். ஆனாலும் உள்ளகப் பொறிமுறையினூடுதான் உண்மையைக் கண்டறிய முடியும் – நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என நீதியமைச்சர் ஹர்ஷன கூறுவது; இழப்பின் வலி கொண்ட தமிழ் மக்கள் மத்தியில் அவர் நாடகம் நடித்துக் காட்டுவதுபோல உள்ளது.

ஆம், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால், அது சர்வதேச விசாரணை மூலமே சாத்தியமாகும்.

தவிர, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென ஜனாதிபதி அநுர விரும்பினால் கூட, அது உள்ளக அரசியலில் சாத்தியமாகாது.

எனவே ஜனாதிபதி அநுரவின் ஆட்சி செங்கோண்மை கொண்டது எனில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு இடம் கொடுப்பதுதான் ஆட்சித் தர்மமும் நீதியுமாகும்.

### மத்திய கிழக்கின் போர்ச் சூழலுக்கு மத்தியில்

# இலங்கையின் பொருளாதாரம் வலுவான நிலையில் உள்ளது

### மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க

(கொழும்பு)

மத்திய கிழக்கின் போர்ச் சூழலுக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதாரம் வலுவான நிலையில் உள்ளது என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எந்தவொரு வெளிப்புற அதிர்வுகளையும் தாங்கும் அளவிலான நிதி வலிமையை இலங்கை தற்போது அடைந்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களால் ஏற்படக்கூடிய எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் விநியோகச் சங்கிலித் தடைகளுக்கு எதிராக இது ஒரு தீர்க்கமான பாதுகாப்பு உத்தியாக அமையும்.

கடந்த பொருளாதார நெருக்கடி காலத்தில் 70% ஆக இருந்த பணவீக்கம் தற்போது 1.6% வரை குறைந்துள்ளதால், உலக சந்தையில் விலை அதிகரிப்பு ஏற்படும் போது உள் நாட்டுச் சந்தையைப் பாதுகாப்பதற்கான நிதி இடைவெளி (Financial Space) மத்திய வங்கிக்கு உள்ளது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

முன்னர் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு வெளிநாட்டு அந்நியச் செலாவணி இல்லாமையினால் ஏற்பட்டது என்றபோதிலும், தற்போதைய அபாய நிலைமை உள்நாட்டு நிதிப் பற்றாக்குறையினால் ஏற்படுவது அல்ல எனவும் உலகளாவிய விநியோகத்தில் நிலவும் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டது எனவும் அவர் விளக்கமளித்தார். (ம-7)

## 3 மாதங்களுக்குள் அறிக்கை கிடைத்தால் இந்த ஆண்டுக்குள் மாகாணசபைத் தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறைமை குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள விசேட தெரிவுக்குழு, எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்குமாயின், இந்த ஆண்டுக்குள்ளேயே தேர்தலை நடத்த முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நிலவும் இழுபறிகள் குறித்து ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கலப்புத் தேர்தல் முறைமையில், எல்லை நிர்ணயப் பணிகள் நிறைவடையாத காரணத்தினால் கடந்த பல வருடங்களாக மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இன்றி இயங்கி வருகின்றன.

பழைய விகிதாசார முறைமையில் தேர்தலை நடத்துவதா அல்லது புதிய கலப்பு முறைமையில் நடத்துவதா என்பது குறித்து பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் ஏற்கெனவே பலமுறை வியாக்கியானம் வழங்கியுள்ளது.

எல்லை நிர்ணயப் பணிகள் முடியும் வரை பழைய விகிதாசார முறைமையிலாவது தேர்தலை நடத்தி, மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என்பதில் ஆணைக்குழு உறுதியாக உள்ளது.

தெரிவுக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், சட்ட ரீதியான அதிகாரங்களைப் பயன்படுத்தித் தேர்தலை நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆணைக்குழு உடனடியாக ஆரம்பிக்கும்.

இதன் மூலம் நீண்ட காலமாகத் தாமதிக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டின் இறுதிக்குள் நடத்த முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ம-7)

## ரியாத், டுபாய் நாடுகளுக்கான விமான சேவைகள் ஆரம்பம்

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அறிவிப்பு

மத்திய கிழக்கில் தொடரும் போர் பதற்றங்களுக்கு மத்தியில் ரியாத் மற்றும் டுபாய்க்கான தமது அன்றாட விமான சேவைகளை மீள ஆரம்பிப்பதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் சூழ்நிலையைத் தொடர்ச்சியாக கண்காணித்து, அதன் அடிப்படையில் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் நலனிற்கு முன்னுரிமை அளித்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில், ரியாத்திற்கு தினசரி சேவைகள் நேற்றிரவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் டுபாய்க்கான விமானங்கள் இன்று மீண்டும் தொடங்கும் என்றும் தேசிய விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் மாற்று ஏற்பாடுகள் குறித்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் 24 மணிநேர தொடர்பு மையத்தை 1979 எனும் இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் www.srilankan.com பயணிகள் சரிபார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். (ம-7)

## மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் 2026 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியருமான சபா ஆனந் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

---

(மானிப்பாய்)

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ரி. திலீப்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவனும் மகப்பேற்றியல் மருத்துவ நிபுணருமான ஏ.ஶ்ரீதரன் அவர்களும் அவர் தம் பாதிரியார் மருத்துவர் தயானந்தி ஶ்ரீதரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8)

---

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கணபதிப்பிள்ளை தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவனும் சமூக சேவையாளருமான தேவராசா குலேந்திரன்(நோர்வே) அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தணிகைவேள் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட இறுதிப்போட்டி இன்று!



வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான அமரர் தணிகைவேள் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற் பகல் 2.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சுற்றுப் போட்டிக் குழுத் தலைவர் க.கனகராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜசீலன் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறித்த போட்டியின் இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலை அணியும், மூன்றாம் இடத்திற்கான போட்டியில் ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (3-90)


# INVITATION FOR BID 2026/03

## VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI( Kollankaladdy)

1. The **Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Chairman, Valikamam North PradeshiyaSabha, Kankesanthurai (Kollankaladdy)** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
**Above 5Mn work "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the Public Contract Act No 03. of 1987".**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Bidding document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **2026.03.10 to 2026.03.24** in between 09:00 hrs. and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) T.P:021 2241130, Fax:021 224 3688) from 09:00 hrs to 15:00 hrs. During the period from 2026.03.10 to 2026.03.24 upon payment of non refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee,Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) on or before 10.30 a.m. at 2026.03.25** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy).** commencing at **10.30 AM on 2026.03.17**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2026-03-10 To 2026-03-24 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | 2026-03-17 at 10.30 AM | | | | |
| | Closing and Opening of Bids | | | 2026-03-25 at 10.30 AM | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(14)/05/02/517/PSDG/Road-01/2026 | Construction of Thampa thampi Veethy at Mavaiveemankamam | 5.81 | 84 | C8 or above (Highway) | 3,000.00 | 58,000.00 | 08.07.2026 | 10.06.2026 |
| NP/14/41(14)/05/03/532/Main-01/2026 | Renovation Soda Company East Lanc - Mallakam | 1.58 | 30 | C9 or above (Highway) | 3,000.00 | 16,000.00 | 10.06.2026 | 13.05.2026 |
| NP/14/41(14)/05/03/533/Main-02/2026 | Renovation Senthavathai Road - Kollankaladdy | 0.76 | 30 | C9 or above (Highway) | 3,000.00 | 8,000.00 | 10.06.2026 | 13.05.2026 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Kankesanthurai(Kollankaladdy).**
**10.03.2026**

(C-5163)


# 'முழு நாடும் ஒன்றாக' திட்டத்தின் கீழ் 981 பேர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நாட்டில் போதைப் பொருளைத் தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 981 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சட்ட விரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 11 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இதேவேளை, 989 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 13 பேர் புனர்வாழ்வு நிலை யத்துக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப்பொருள்களையும் இதன் போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இனப்...

இஸ்ரேல் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கவலை வெளியிட்டுள்ளார்.

சுதந்திரப் பறவைகள் மகளிர் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில், முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகமே வியந்து பார்த்த ஒரு போரியல் வாழ்வை வாழ்ந்தவர்கள் ஈழத்தமிழ்ப் பெண்கள். இன்றும் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காக பல ஆண்டுகள் கடந்தும் தாய்மார்கள் வீதியில் நின்று போராடுகிறார்கள். 2009இல் முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளில் கொத்துக்குண்டுகள் வீசப்பட்டு தமிழினம் அழிக்கப்பட்டபோது, அதன் சிதைவுகளையும் ஆவணங்களையும் உலகுக்கு வெளிப்படுத்தியதில் பெண்களின் துணிச்சல்மிக்க பங்களிப்பு மகத்தானது.

ஈரான் இன்று இஸ்ரேல் மீது கொத்துக்குண்டுகளை வீசுவதாக அந்நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ள சூழலில், அன்று 22 நாடுகளின் துணையோடு தமிழினத்தின் மீது இழைக்கப்பட்ட அநீதியை உலகம் மறந்து விடக்கூடாது.

குறிப்பாக, ஐ.நா சபையில் தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலை எனத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது, அதனை எதிர்த்த ஈரானின் நிலைப்பாட்டையும் ஆதரவு வழங்கி அதனை நிறைவேற்றிய அமெரிக்காவின் தமிழர்கள் மீதான சார்பு நிலைப்பாட்டையும் நாம் நினைவில் வைத்து இராஜதந்திர ரீதியான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## சிறுமியை வன்...

ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி பன்னிரெண்டு வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் முல்லைத்தீவுப் பொலிஸாரால் சந்தேகநபர் ஒருவரை கைது செய்யப்பட்டிருந்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரையும் சான்றுப் பொருட்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப் படுத்தியிருந்தனர்.

தொடர்ந்து குறித்த வழக்கானது ஆரம்பத்தில் வவுனியா மேல் நீதிமன்றத்திலும் பின்னர் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த வழக்கின் விசாரணைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் நேற்று குறித்த வழக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி A.G.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த குற்றவாளிக்கு பத்து வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு பத்து இலட்சம் ரூபாய் இழப்பீட்டைச் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் இரண்டு வருட சாதாரண சிறைத்தண்டனையும் அத்துடன் பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் மூன்று மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-7,315)

## இளவாலையில்...

இதில் இளவாலை பெரியவிளான் டச்சு வீதியை சேர்ந்த அருணகிரிநாதர் கார்த்திக் அருண்குமார் (வயது-31) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

அவரது குடும்பத்தினர் நேற்று முன்தினம் காங்கேசன்துறை பகுதியில் நடைபெற்ற இசை நிகழ்வுக்கு சென்றுள்ளனர். பின்னர் நேற்று அதிகாலை வீட்டிற்கு வந்து பார்த்த வேளை குறித்த குடும்பஸ்தர் சடலமாக தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டார்.

இது குறித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் சடலத்தை மீட்ட இளவாலை பொலிஸார் யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60,104)

## கண்டி - நுவரெ...

இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கண்டி நாவலப்பிட்டியைச் சேர்ந்த எம்.கிருஷ்ணகுமார் (வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நயினாதீவில் உள்ள ஆலயங்களில் கண்டி மற்றும் நுவரெலியா பகுதியைச்சேர்ந்த இரண்டு பூசகர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட தொழில் முரண்பாட்டில் நுவரெலியாவைச் சேர்ந்த பூசகரின் கத்திக் குத்துக்கு இலக்காகி கண்டியை சேர்ந்த பூசகர் பலியாகியுள்ளார்.

சம்பவம் குறித்து ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

## எரி...

யடையும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளப் பதிவு ஒன்றை இட்டு இதனை விளக்கியுள்ளார்.

அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக அமெரிக்காவும் உலகமும் செய்ய வேண்டியது ஒரு சிறிய நிதித் தியாகம் மட்டுமே. இதைப் பற்றி வேறுவிதமாகச் சிந்திப்பவர்கள் முட்டாள்கள் மட்டுமே"என்று ட்ரம்ப் தனது "ட்ரூத்சோஷியல்" (Truth Social) சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஈரானுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வருவது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடனான பரஸ்பர உடன்பாட்டின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்றும் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## முதலாம்...

மார்ச் மாதம் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணம் செய்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள்மடத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டு அப்பகுதியில் புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குருக்கள்மடம் மனிதப்புதைகுழி முதலாம் கட்ட அகழ்வுப் பணி மார்ச் மாதம் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீதிவான் உத்தரவிட்டுள்ளதாக வழக்கில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 6128
U 0 2 4 8 1 9
அத சம்பத
U 4 8 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 0703
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.03.09
8244
விருச்சிகம் 24 31 62
8547

தன நிதானய
திகதி - 2026.03.09
சீட்டிழுப்பு இலக்கம் - 2158
T 04 16 23 42 T

மெகா பவர்
திகதி 09/03/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2476
K 13 01 21 22 52

ஜய
திகதி 2026.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 0396
B 3 9 3 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4370
சீட்டிழுப்பு திகதி 09.03.2026
U 05 27 44 56
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 1437
கும்பம் 36 41 46 60 கும்பம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல் சம்பத
09.03.2026 வெற்றி வாரம் 0836
J 8 6 9 7 7 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,274,924.80
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3102
சீட்டிழுப்பு திகதி 2026.03.09 தினம் திங்கட்கிழமை
16 25 64 68 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.105,529,598.40

சனிதா
திகதி 09.03.2026 வெற்றி வாரம் 5263
44 50 66 79 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,523,822.00
ரூ. 50,000/- பணப்பரிசு

சசிரி
932
09.03.2026
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 23 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,755,040.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4814
சீட்டிழுப்பு திகதி 09.03.2026 தினம் திங்கட்கிழமை
05 10 36 46 சிம்மம்
அருந்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,378,624.40

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 30 15 19 47 52
2278
09.03.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.182,205,884.00

அத கோட்டிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2928
சீட்டிழுப்பு திகதி : 2026.03.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.98,846,218.40
14 20 23 59 P


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாப்பிள்ளை தேவை

01.அனலைதீவு, இந்து. 2000, கேட்டை, O/L, Cananda Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54407)

02.சண்டிலிப்பாய், இந்து. 1987, உத்திரட்டாதி, Business Managment, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(57038)

03.மீசாலை, இந்து. 1993, சதயம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(56429)

04.குப்பிளான், இந்து, 1997, கேட்டை, Lawyer, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55147)

05.சுதுமலை, இந்து, 1991, விசாகம், Bsc BSCN, Canada Citizzen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55115)

06.மாதகல், இந்து, 1990, திருவோணம், BBA, Germany & Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54542)

07.கந்தர்மடம், இந்து, 1988, ரோகிணி, Bsc Biomedical, ACCA, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54136)

08.காரைநகர், இந்து, 1992, சித்திரை, Phd, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54115)

09.காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், AAT, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55026)

10.மாவிட்டபுரம், இந்து, 1985, ரேவதி, A/L, Manager, Uk Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54067)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

(C-5167)

**S.Sharma J.P** | 077 539 3728
www.thaalee.com | 077 189 0367

## எரிபொருட்களின்...

கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 317 ரூபாவாகும்.

340 ரூபாயாக நிலவிய ஒக்டேன் 95 ரகப் பெற்றோல் லீற்றரின் விலை 25 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 365 ரூபாவாகும்.

281 ரூபாயாக காணப்பட்ட ஓட்டோ டீசல் லீற்றரின் விலை 22 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 303 ரூபாயாகும்.

329 ரூபாயாக நிலவிய லங்கா சுப்பர் டீசல் ஒன்றின் விலை 24 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 353 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் விலை 13 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 195 ரூபாவாகும். (ம-7)

## 3,700 மெட்ரிக் தொன் லிட்ரோ காஸ் எரிவாயு விநியோகம்

(கொழும்பு)

உள்நாட்டு சந்தைக்கு திங்கட்கிழமை (09) 3,700 மெட்ரிக் தொன் எல்பி (LP) எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படும் என லிட்ரோ காஸ் லங்கா (Litro Gas Lanka) நிறுவனம் அறிவித்துள்ளது.

அண்மைக் காலங்களில் மொத்தம் 7,900 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

மார்ச் மாதத்திற்காக 38,000 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்கள் கோரப்பட்டுள்ளது. கூடுதலாக 30,000 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்கள் தற்போது மாலைதீவில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

கோரப்பட்டுள்ள மற்றுமொரு கப்பல், 33,000 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்களுடன் மார்ச் 17 ஆம் திகதி மாலைதீவை வந்தடைய உள்ளது என்றார். (ம-7)

### ஆகாஸ் நகை மாடம்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5166)

076 825 7716 (ஆகாஸ்)

### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள,பழக விரும்பும் (ஆண், பெண்) இருபாலாரும் உடன் தேவை. யாழ். நகரை அண்டியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- விற்பனையாளர் (Salesman)
- பில் கிளார்க்
- பேக்கிங் செய்பவர்

(7014)

077 590 6482, 076 028 9835

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில் 12 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகு வழி வேம்படி வீதியில்
- யாழ்ப்பாணம் காரைநகர் பிரதான வீதியில் இருந்து 300m தூரத்தில்
- வங்கிகள், பாடசாலைகள், பிரதான வர்த்தக நிலையங்கள் 400m தூரத்துக்குள்
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- பார்வையிடும் நேரம் - காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(2130)

074 029 2338, 076 990 3039, 077 288 0152

### பேக்கரி உதவியாளர்கள் தேவை

பாண், பணிஸ், கேக் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு ஆண், பெண் உதவியாளர்கள் தேவை.

- வயது எல்லை :- 20 தொடக்கம் 40 வயது வரை
- வெளி மாவட்டத்தவர்களுக்கு தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்படும்.
- ஆரம்ப சம்பளம் :- 25,000/=
- ஆறு மாத பயிற்சி காலத்தின் பின் சம்பளம் அதிகரிக்கப்படும்.

(2129)

தொடர்புகளுக்கு 077 325 3606

### விற்பனையாளர் தேவை(பெண்)

யாழ். நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள, தொழில் பழக ஆர்வம் உள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும்.

**சிவகணேசன் TEX**
பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(C-5168)

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் மூத்தவிநாயகர் வீதியில் ஒரு வரவேற்பறை, 3 குளியலறை, 5 தனி அறைகள், சமையலறை என்பவற்றுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு.
Whatsapp மெசேஜ்சில் தொடர்பு கொள்ளவும்.

(7008)

075 691 3616
077 864 4578

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சிவராசா

கல்வயலைச் சேர்ந்த செல்லத்துரை சிவராசா அவர்கள் நேற்று (09.03.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா(இளைப்பாறிய ஆசிரியர்) - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற யோகேஸ்வரி அவர்களின் கணவரும் சிவபாலினி(கனடா), சிவகேசவன்(கல்வயல்), சிவரூபி(ஆசிரியர் - யா/ ஏழாலை தெற்கு அ.தி.த.க பாடசாலை), சிவரதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவபாலன்(கனடா), சிவமதி(கல்வயல்), பத்மநாதன்(உப அதிபர் - யா/ யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஷ்ணுஜன், அக்சயன்(கனடா), தனுஸ்கா, பானுஷாந்த் (மாணவர் - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் தங்கராசா, ஸ்ரீஸ்கந்தராசா(கல்வயல்) ஆகியோரின் அன்பு அண்ணாவும் புவனேஸ்வரி, புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான செல்வநாயகி, யோகேஸ்வரன், இந்திராணி மற்றும் செல்வராணி, செல்வராசா(ஓய்வுபெற்ற உபஅதிபர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜெயதீஸ்வரி - ஜெயமுருகன் (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ மிருசுவில் றோ.க.பாடசாலை), ஜெயகாந்தமலர் ஆகியோரின் மைத்துனரும் சுகிர்தராஜ் - டினோயா, வீஸ்மன் - தக்ஷனா, லக்சன் - சினோபனா ஆகியோரின் பெரிய தந்தையும் ஷர்சா, ஹரீஸ், ஆருஷா, அக்சய், ஆரூஸ், சாயுஸ் ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கல்வயல், சாவகச்சேரி. | தொடர்பு : 077 626 4640 | (7013) | தகவல் : குடும்பத்தினர்

### விநியோகஸ்தர்கள் தேவை

- ரெடி மிக்ஸ் பூச்சு கலவை, கட்டு கலவை மற்றும் கான்கிரீட் கலவைகள்.
- கட்டிட வேலைகளுக்கு நேரம் மிச்சப்படுத்தும் தயாரிப்பு.
- நல்ல இலாப வாய்ப்பு.

வடக்கு, கிழக்கு மற்றும் நாடு முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை..

ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(7014)

076 324 9977, 011 351 6516

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org